# இயேசு யார்?

## பாடம் - 3

## இரட்சிப்பின் வழி

இயேசு யார் என்றும் அவருடைய தெய்வீகத்தையும் தெளிவாக அறிந்துகொண்டோம். இப்பாடத்தில் இரட்சிப்பின் வழியை அறிந்து அதில் நிலைத்திருப்பதைப்பற்றி அறிந்துகொள்வோம். இரட்சிப்பின்வழி ஒன்றே இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் தேவன் தந்த மிகப்பெரிய ஈவு ஆகும். கிறிஸ்துவினால் மட்டுமே மனிதனுக்குக் கிடைப்பதும், நம் ஒவ்வவொருவருடைய ஒட்டுமொத்த நோக்கமானதும். இரட்சிப்பு என்பதாகும்.

இரட்சிப்பு என்றால் பாவம் செய்வதிலிருந்தும், ஏற்கனவே செய்த பாவங்களின் பலன்களிலிருந்தும் விடுவிக்கப்படுதல் என்று பொருள். இந்த இரட்சிப்பின் வழி நாம் மனந்திரும்பும் நாளில் துவங்கி, இயேசுவின் நியாயத்தீர்ப்பு நாளில் முடிவடைகிறது.

இந்த இரட்சிப்பின் வழியினை நாம் பூலோகத்திலிருந்து பரலோகத்திற்கு ஏறிற்செல்லும் பாதை என்றும் கூறலாம். இரட்சிப்பின் வழியில் கீழ்க்கண்ட மேல்நோக்கிச் செல்லும் படிகள் இருப்பதாகக்கருதி இப்பாடத்தில் தியானிக்கலாம்.

**1. தன்னை உணர்தல்** - பொதுவாக மனிதர்கள் அனைவரும் தங்களைப்பற்றி கீழ்க்கண்டவாறு நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

1. நான் நல்லவன். சொல்லிலும் செயலிலும் நான் நல்லவனே.

2. மற்ற அநேக மனிதரைப் பார்க்கிலும் நான் நல்லவனே. நான் யாரையும் ஏமாற்றவில்லை, யாருக்கும் தீநகுசெய்யவில்லை. அவசரத் தேவைகளுக்கு ஓரிரு பொய்களை மட்டும் பயன்படுத்த நேர்ந்துவிடுகிறது. அவ்வளவுதான். மற்றப்படி நான் நல்லவன்தான்.

3. நான் ஒரு சராசரி மனிதன்தான். கடவுளை நம்புகிறேன். மிகவும் பக்தியாக இருக்கிறேன். தெய்வம் எனக்கு எப்போதும் நல்லது செய்ய வேண்டும். ஒருசில பாவங்களை நான் செய்தே ஆகவேண்டும். அதற்குப்பதிலாக புண்ணியங்களையும் செய்கிறேனே.

4. நான் மற்றவர்களுக்கு அநேக உதவிகள் செய்துள்ளேன். முடிந்தவரை நல்லகாரியங்களை செய்துவருகிறேன். இதைவிட ஒருவன் எப்படி நல்லவனாக இருக்க முடியும்.

5. நான் மற்றவர்களுக்குத் துன்பம்தராத பல பாவங்களைச் செய்தகொண்டுதானிருக்கிறேன். தெய்வம் எனக்குக் கொடுத்த வாழ்வில் என்னால் முடிந்த அளவு சாமிக்கு நான் குறைவைப்பதில்லை. சாமியும் எனக்கு எந்தக் குறையும் வைக்கக் கூடாது.

6. என்னிடம் குடி. சூதாட்டம் போன்ற தீய பழக்கங்கள் இல்லாததால் நான் நல்லவன்தான். அல்லது மேற்படி பழக்கங்கள் ஓரளவு என்னிடத்தில் இருந்தாலும் அதனால் மற்றவர்களுக்குக் கெடுதியில்லை. எனவே அகைள் தவறில்லை.

மேற்சொன்னவைகளில் நீங்கள் உங்களைப்பற்றி எப்படி நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை யோசித்துப் பார்த்துவிட்டு, தொடர்ந்து படியுங்கள்.

இப்படி ஒவ்வொரு மனிதர்களும் தங்களைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டிருந்தாலும், நம்மைப் படைத்தவரும், நமது நினைவுகள் ஒவ்வொன்றையும் அறிந்தவருமான தேவன் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார் என்றால்,

1. நீதிமான் ஒருவனும் இல்லை, எல்லாரும் கெட்டுப்போனார்கள், எல்லாரும்பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்.

2. மனுஷனுடைய இருதயம் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது.

3 . மனுஷனுடைய இருதயத்திலிருந்து பொல்லாத நினைவுகளும், விபச்சாரங்களும், கொலைவெறிகளும், பொருளாசைகளும், விக்கிரக ஆராதனைகளுமாகிய சகல பாவங்களும் புறப்பட்டுவந்து அவனை அனுதினமும் தீட்டுப்படுத்தி வருகிறது.

ஆம், தேவன் சகல மனுஷரயும் குறித்துச் சொல்வதுதான் உண்மையும் சத்தியமுமானது.

ஒரு குற்றவாளி தன்னைப்பற்றி என்னதான் நினைத்துக்கொண்டிருந்தாலும். அவனை விசாரித்த

நீதிபதி என்ன தீர்ப்பை எழுதுகிறாரோ அதுதான் உண்மையும். செல்லுபடியாகக்கூடியதுமாகும்.

அதேபோல் சர்வலோக நீதிபதியான தேவன், சகல மனிதனைக்குறித்தும் சொல்வதே உண்மையானது. மனிதன் தன்னை நல்லவனாக நினைத்துக்கொள்வதாலும், பிறருக்கு அப்படி வெளிக்காட்டிக்கொள்வதாலும் நீதிமானாகிவிட முடியாது. தேவனுடைய பார்வையில் ஒருபாவமும் செய்யாத நீதிமான் ஒருவனும் இல்லை. தேவனுடைய பார்வையில் நான் ஒரு பாவியாகத்தான் இருக்கிறேன் என்ற உண்மையை உணர்வதே தன்னை உணர்தல் ஆகும்.

**2. மனந்திரும்புதல்** - தேவனுடைய பார்வையில் தான் ஒரு பாவி என்று உணர்ந்துகொண்ட ஒவ்வொரு மனிதனும், தனது பாவங்களுக்காக மனம் வருந்துதலும். தேவனிடம் தனது பாவங்களை அறிக்கைசெய்து, இனிமேல் பாவமில்லாத வாழ்க்கை வாழ விரும்புதலுமே மனந்திரும்புதல் எனப்படும். மனந்திரும்புகிறவனின் அறிவு, சித்தம், உணர்ச்சி யாவுமே இதில் ஒன்றியிருக்கவேண்டும்.

முன்பு சொன்னபடி ஒவ்வொரு மனிதனும் செய்த பாவத்தின் அளவு வேறுபடுமேயன்றி. எல்லாருமே மனந்திரும்ப அவசியமான நிலையில்தான் இருக்கிறார்கள். தான் தேவனுடைய பார்வையில் ஒரு பாவிதான் என உணர மறுப்பவனும், செய்த பாவங்களுக்காக வருந்தாதவனும், இனிமேல் பாவமில்லாத வாழ்க்கை வாழவேண்டுமென்று விரும்பாதவனும் மனந்திரும்பமாட்டான். அப்படிப்பட்டவனுக்கு இரட்சிப்பு இல்லை.

இருட்டில் இருக்கும் ஒருவன் தன் சட்டை அழுக்காயிருக்கிறது என்பதை உணரமுடியாது. அதுபோல இயேசுவின் வெளிச்சத்துக்குள் வராத யாவரும் தான் பாவி என்பதை உணரவே முடியாது. உங்களுக்குள் பாவ உணர்வு வரவேண்டுமானால், பரிசுத்தமுள்ள தேவனாகிய இயேசுவின் கண்முன் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

மனந்திரும்புகிறவன் தனது சொந்த வார்த்தைகளால், தனிமையில் தேவனிடம் தனது பாவங்களை அறிக்கை செய்யவேண்டும். அநேகர் உணர்ச்சிவசப்பட்டு, கடந்தகால பாவங்களை நினைத்துக் கண்ணீர்மட்டுமே சிந்துவர். இந்தக் கண்ணீர் சுய பச்சாதாப உணர்வினால் இல்லாமல், பாவங்களுக்கான உண்மையான மனவருத்தத்தினால் வந்தால் அதுவும் பாவ அறிக்கைதான். இப்படிப் பாவ அறிக்கை செய்வதற்காக நீங்கள் கோயிலுக்கோ அல்லது பாதிரியாரிடமோ செல்லவேண்டியதில்லை. நீங்கள் இருக்கும் வீட்டிலேயே தனியான இடத்தில் அமர்ந்து, உங்கள் கண்களை மூடிக்கொண்டு கடந்தகால வாழ்க்கையையும், அதில் உங்கள் பாவங்களினால் ஏற்பட்ட தோல்விகள் துயரங்களையும் எண்ணிப்பாருங்கள். பின்னர் “இயேசுவே, மற்ற எல்லா மனிதர்களையும்போலவே நானும் உமது பார்வையில் அநேக பாவங்களைச் செய்துவிட்டேன், என்னை தயவாய் மன்னியும். எனது பாவங்கள் அனைத்தும் எனக்கு நினைவில் இல்லாவிட்டாலும் நான் அவற்றுக்கெல்லாம் ஒருநாள் உம்மிடம் கணக்கு ஒப்படைக்க வேண்டியதிருக்கும் என்பதை உணராமல் இருந்துவிட்டேன். இன்றுவரை நான் செய்த பாவங்களை மன்னித்து பாவமில்லாத ஒரு புதிய வாழ்க்கை வாழச்செய்யும்” என்று வேண்டுதல் செய்துகொண்டேயிருங்கள். தனது வாழ்வில் ஒருமுறையாவது இதைச் செய்யாதவர்கள் இன்னும் மனந்திரும்பாதவர்களாவார்கள். அவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

**3.விசுவாசம் (நம்பிக்கை)** - மனந்திரும்புகிற யாவரையும் இயேசு மன்னிக்கிறேன் என்று வாக்குக்கொடுத்துள்ளார். மனந்திரும்புகிற ஒவ்வொருவரும் கீழ்க்கண்டவற்றை நம்பவேண்டும். அப்படி நம்புவதே இரட்சிப்பின் மூன்றாவது படியான விசுவாசம் என்பதாகும்.

1. இயேசு ஒருவரே பாவங்களை மன்னிக்க அதிகாரமும் வல்லமையும் உடையவர்.

2 . அவருடைய வார்த்தையின்படியே பாவங்களுக்காக மனம்வருந்தி, அவரிடம் மன்னிப்புக்கேட்டு இயேசுவைநோக்கி மனந்திரும்பிய என்னை, எனது கடந்தகால வாழ்க்கை எப்படிப்பட்டதாய் இருந்தாலும் இயேசு முற்றிலும் அதை மன்னித்துவிட்டார். அவருடைய வேதம் சொல்கிறபடி மனந்திரும்புகிற என்னுடைய பாவத்தின் பலன்கள் அனைத்தையும் இயேசு தமது ரத்தத்தைச்சிந்தி சிலுவையில் சுமந்து தீர்த்துவிட்டார்.

3. இப்போது நான் தேவனுடைய பார்வையில் ஒரு பாவமும் செய்யாத சிறு குழந்தையாகிவிட்டேன்.

மேற்படி நான்கினையும் நீங்கள் உண்மையாக விசுவாசித்தால், பாவ மன்னிப்பின் சந்தோசத்தால் துள்ளுவீர்கள். புதிதாகப்பிறந்த உணர்வு உங்களுக்குள் வரும். அப்படி வராவிட்டால் மேற்சொன்ன முதல் இரண்டு படிகளையும் மீண்டும் வாசித்து அதன்படி

செய்யுங்கள். எத்தனை முறை முயற்சி செய்தாவது எப்படியும் இன்று பாவமன்னிப்பின் சந்தோசத்தைப் பெற்றுவிடுங்கள். இயேசுவின்கிருபை உங்களுக்குக் கிடைத்திருப்பதால்தான், நீங்கள் இந்த இரட்சிப்பின் வழியை அறிந்து கொண்டிருக்கிறீர்கள். எனவே இயேசுவின் வல்லமை உங்களுக்குள்ளே பாய்ந்துசென்று, நீங்கள் பாவமன்னிப்பின் சந்தோசத்தைப் பெற்றுக்கொள்ளும்வரை அவரை விடாதீர்கள்.

பாவமன்னிப்பின் சந்தோசம் உங்களுக்குள் வந்தபின், மற்றவர்கள் நீங்கள் மனந்திரும்பியதையும் புதிய வாழ்க்கை வார்த்துவங்கியிருப்பதையும் நம்ப மறுப்பார்கள். ஏனெனில் அதுபோல் அவர்கள் கேள்விப்பட்டதுமில்லை, நம்புவதுமில்லை. மனிதர்கள் பரிகசித்தாலும், தேவனுடைய பார்வையில் நீங்கள் ஒரு விலைமதிக்க முடியாத ***பொக்கிஷமாகவும், அவருடைய சொந்தப் பிள்ளையாகவும்*** இருக்கிறீர்கள் என்பதை உணருங்கள். அந்தப் பரிசுத்த உணர்வோடு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள், இதுதான் மறுபிறப்பு என்பது. இந்த மறுபிறப்பில் பங்கேற்பது மனிதனுடைய ஆத்துமா (மனம், சித்தம், உணர்ச்சி) மட்டுமே. சிலர் நினைப்பதுபோல் மனித சரீரம்(உடம்பு) மீண்டும் பிறக்கப்போவதில்லை. (இந்த மறுபிறப்பின் வெளியரங்கமான அடையாளம்தான் திருமுழுக்கு எனப்படும் ஞானஸ்நானம். இதனை பின்வரும் பாடங்களில் அறிந்துகொள்வோம்)

**4. நிலைத்திருத்தல்** - இரட்சிப்பின் முதல் மூன்றுபடிகளையும் ஒரே நாளில் நீங்கள் கடந்து மனம் மகிழ்ந்திருப்பீர்கள். நிலைத்திருத்தல் என்பது மனந்திரும்பி பாவமன்னிப்பைப் பெற்றவர்களாகிய நீங்கள், தொடர்ந்து தனது மரணநாள் மட்டும் பாவமில்லாத வாழ்வு வாழ்வதாகும். அப்படிப் பாவமே செய்யாமல் ஒரு மனிதன் வார்ந்துவிட முடியுமா என்றால், முடியாது என்பதுபோல்தான் தோன்றும்.

தாயின் கையைப்பிடித்துக்கொண்டு நடக்கப் பழகும் குழந்தை பொதுவாக கீழே விழாது. ஆனால் கால் சறுக்கி தரையில் சாயும். தாயின் கையைமட்டும் விடாதிருந்தால் தாய் அதனைத் தூக்கி நிறுத்துவாள். முதலில் அடிக்கடி சறுக்கும் குழந்தையை காலப்போக்கில் நன்கு நடக்கப் பழகும்வரை தாயின் கரமும், அதன்பின் தாயின் அருகாமையும் நிமிர்ந்து நடக்கப் பழக்கிவிடும். நமது ஆன்மீக வாழ்விலும் அதுபோலவே இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும், அவருடைய வசனநகளையும், ஒருவன் விடாமல் பற்றிக்கொள்ளும்போது, அவன் பாவம் செய்யமாட்டான். ஆனால் சிலசமயம் சறுக்கல்களைப்போல் சில பாவம் செய்துவிடும்போது, தேவன் மீண்டும் மன்னித்து நிலை நிறுத்துகிறார் என்பதை அவன் நினைவில் கொள்ளவேண்டும். இந்த உபதேசமானது யாருக்கும் பாவம் செய்யும் அனுமதியைக் கொடுப்பதில்லை.

சறுக்கல்கள் என்பதற்கும் வீழ்ச்சி என்பதற்கும் வேறுபாடு உண்டு. வீழ்ச்சி என்பது முழுவதுமாக ஒருவன் பழைய பாவவாழ்க்கைக்குத் திரும்பிவிடுதலாகும். சறுக்கல்கள் என்பது அறியாமல் செய்துவிடும் பாவமும், தேவன் தண்டித்துச் சரிக்கட்டும் பாவங்களுமாகும். புதிய வாழ்க்கையில் ஒரு பாவத்தைச் செய்யுமுன் உனக்கு அது பாவம் என்ற உணர்வுவந்தால் அதைச்செய்யாதே. தேவன் அதனை மன்னிப்பார் என்று நினைத்து துணிந்து செய்துவிடாதே. ஏனெனில் அறிந்து செய்யும் பாவங்களுக்கு மன்னிப்புத்தராமல், தேவன் நீதியைச்சரிக்கட்டும் தண்டனைகளைக் கண்டிப்பாகத் தருவார். அதேசமயம் சில பாவங்களைச் செய்தபின்தான் தவறுசெய்துவிட்டோமே என்ற உணர்வு வந்தால் அதனை தேவன் மன்னித்து மீண்டும் செய்யாதிருக்கும்படி எச்சரிப்பார்.

மனிதர்களிடம் சொல்வதுபோல் யாரும் தேவனிடம் இது அறிந்துசெய்தது, இது அறியாமல் செய்தது என்று தாங்களாக விளக்கமளிக்க முடியாது. தேவன் எல்லா இருதயத்து நினைவுகளையும் அறிந்தவர். அவரளிக்கும் தீர்ப்பே நீதியானது, செல்லுபடியாகக்கூடியது.

புதிய வாழ்க்கையின் மேற்படி இருவகை சறுக்கலான பாவங்களையும் நன்கு புரிந்துகொள்ளுங்கள்.உதாரணமாக பழைய வாழ்க்கையில் நீ ஒரு இலஞ்சம் வாங்கும் அரசு ஊழியனாக இருந்தாய் எனக்கொள்வோம். புதிய வாழ்க்கை துவங்கியபின் இலஞ்சம் வாங்க நேரும்போது உன் மனச்சாட்சி உன்னை அதைச் செய்யக் கூடாதென தெளிவாக எச்சரிக்கும். *"எனக்கு வேறு வழியில்லை, இந்த வேலை அப்படி, எனது மேலதிகாரிகளுக்கு நான் கொடுத்துத்தானே ஆகவேண்டும், எப்படியும் தவறுசெய்ய வேண்டியதிருக்கும்போது பணம் வாங்காவிட்டாலும் பாவம்தானே, தேவன் இந்த ஒரு பாவத்தை மட்டும் மன்னிப்பார், எனது அத்தியாவசியத் தேவைகளுக்காகத்தானே வாங்குகிறேன், வாங்கிய இலஞ்சத்தைக்கொண்டு பல நல்லகாரியங்கள் செய்கிறேனே, நான் வாங்காவிட்டாலும் நம்பமாட்டார்கள், கொடுப்பவர்கள் பணக்காரர்கள்தானே,"* என்பதுபோன்ற காரணங்களை நினைத்துக்கொண்டு துணிந்து இலஞ்சம் வாங்கிவிடாதே. *தேவனிடத்தில் மேற்படி எந்தக் காரணமும் செல்லாது*. நீ வாங்கும் ஒவ்வொரு பைசாவுக்கும் தேவன் கணக்குவைத்து அதற்கான தண்டனையை நிச்சயமாகத் தந்துவிடுவார். அவரிடத்தில் பாரபட்சமே இல்லை. அதேபோல்தான் குடிப்பது, பொய் பேசுவது, பொருந்தாக் காமம், விக்கிரக ஆராதனை, பொருளாசை போன்ற தெரிந்தே செய்யும் பாவங்களுக்கு ஏதேனும் ஒரு காரணத்தைத் தேவனிடம் கூறவே முடியாது. எனவே

புதிய வாழ்க்கை துவங்கிய வினாடிமுதல் இவற்றைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் கண்டிப்பாக அதற்கான தண்டனை உண்டு.

புதிய வாழ்க்கை துவங்கியவன் ஒருமுறை தன் தாயிடமோ, மனைவியிடமோ கோபப்பட்டு தீயவார்த்தை பேசிவிடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் பேசியபின்னர்தான் இப்படிச் செய்துவிட்டோமே என உணர்வு வந்தால், அது அறியாமல் செய்த பாவமாகிறது. உடனடியாக தேவனிடம் மன்னிப்புக்கேட்டு அவர் மனதில் சொல்கிறபடி தாயிடமோ, மனைவியிடமோ ஒப்புரவாகவேண்டும். அப்போது அது உடனடியாக மன்னிக்கப்படும். காலப்போக்கில் மீண்டும் என்றாவது கோபம் வரும்போது உடனே மனச்சாட்சி, முன்பு நடந்ததைச் சுட்டிக்காட்டி அதைத் தடுத்துவிடும். அதனை மீறி கோபப்பட்டால்

அது அறிந்து செய்ததாகி தண்டனைக்கு ஏதுவாகும். இப்படியாக அறியாமல் செய்யும் பாவங்கள் குறைந்துகொண்டே வரும். அறிந்து செய்பவை தண்டிக்கப்படும். ஆனால் எக்காரணம்கொண்டும் ஒரு பாவத்தைச் செய்துவிட்டதற்காக இனி புதிய வாழ்க்கை அவ்வளவுதான், பழைய வாழ்க்கைக்கே திரும்பிவிட வேண்டியதுதான் என்று சோர்ந்துபோய் விட்டுவிடாதீர்கள். அதுதான் வீழ்ச்சி என்பதாகும். வீழ்ச்சி அடைந்தவனுக்கு ஆயுளும், மீண்டும் தேவனுடைய கிருபையால் மனந்திரும்பும் வாய்ப்பும் கிடைத்தால், அவனும் பிழைத்துக்கொள்ள முடியும். அப்படிக் கிடைக்காவிடில் மனந்திரும்பாத மற்ற மக்களுக்குக் கிடைக்கும் நரகமே அவர்களுக்குமுண்டு.

ஒருவன் தனது வாழ்வில் இப்படி எத்தனை முறை சறுக்கலாம், அல்லது எத்தனை முறை விழுந்து எழலாம் என்று வரைமுறை கிடையாது. ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் தேவனுடைய கிருபையின் அளவு வித்தியாசமாக இருக்கிறது. ஒரே தடவை பரிசுத்த வாழ்விலிருந்து விழுந்தவனுக்கு, அவருடைய கிருபை முடிந்துவிடுவதால், மீண்டும் எழமுடியாமல் அவனை நரகத்துக்கு அனுப்பவும் செய்வார். சிலருக்கோ மீண்டும் எழுந்துகொண்டு வாழும்படி கிருபையையைக் கட்டளையிடுகிறார். எனவே உயிருள்ளவரை நாம் மீண்டும் எழுந்துகொண்டு, பரிசுத்த வாழ்க்கையைப் பற்றிக்கொள்ள தேவன் கொடுத்த தருணம் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு, மீண்டும் அவரைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் நிலைத்திருப்பது என்பது தொடர்ச்சியான ஒரு போராட்டமாகும். வாழ்க்கை முடியும்வரை சோர்வடையாமல் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களே ரட்சிக்கப்படுவார்கள்.

அதில் பரிசுத்தம் அதிகரித்துக்கொண்டே செல்லும். அசுத்தம் குறைந்துகொண்டேயிருக்கும். இந்த வாழ்க்கையில் நிலைத்திருக்க ஜெபமும், வேதவாசிப்பும் மிக அவசியமானவை. தேவனை ஆராதிப்பது, விசுவாசிகளின் சபையில் இணைவது, ஊழியம் செய்வது, விசுவாசிகளுக்கு உதவுவது ஆகியவை மேலும் வளர உதவுகிற ஏதுக்களாகும்.

அன்பானவர்களே! இரட்சிப்பின் வழியின் முதல் மூன்றுபடி களையும் கடந்து இன்றே நீங்கள் மகிழ்ச்சியுடன் புதிய, நிலையான, வாழ்வைத் துவக்கவேண்டுமென்று இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துகிறோம்.

இன்று அநேகர் தேவ கிருபையினால் தங்களுடைய குடி, வெறி. களியாட்டு, விபச்சாரம், பொய், லஞ்சம் ஆகிய பாவங்களை விட்டுவிட்டு, பாவமன்னிப்பைப்பெற்று, புதிய சமாதானமான வாழ்க்கை வாழுகின்றார்கள். கிறிஸ்தவர்கள் என்ற பெயர்மட்டுமே உடைய வேறு சிலரோ மேற்படி ரட்சிப்பின் வழியை அறியாமல் வீணாக ஆராதனை செய்து, தவறான வாழ்க்கையும் வாழுகிறார்கள். இயேசுவின் நாமத்தினால் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்பவர்கள் எல்லா இடங்களிலும் சிதறி இருக்கிறார்கள். அவர்களை உலகம் அறியாது. தேவன் அறிவார். நீங்களும் அந்தப் பரிசுத்தவான்களில் ஒருவராகுங்கள். உங்களுக்கு இந்தச் சத்தியத்தை எழுதும் நாங்கள் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்டு, பாவ மன்னிப்பைப்பெற்று, சத்தியமான சந்தோசமான வாழ்க்கை வாழுகிறவர்கள்.

உங்கள் அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள், உங்கள் வினாக்களுக்கு விடையளிக்கவும். உங்கள் ஆன்மீக வாழ்க்கைக்கு உதவவும் நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம். தொடர்ந்து பாடங்களுடன் வரும் கேள்விகளுக்கு விடையளியுங்கள். கர்த்தர் உங்களுக்கு தம்முடைய மாறாத கிருபைகளை அளிப்பாராக!

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1) **பொதுவாக மனிதர்கள் தங்களை எப்படிப்பட்டவர்களென்று நினைத்துக்கொண்டிருப்பதை நீங்கள் உங்கள் அனுபவத்தில் கண்டிருக்கிறீர்கள்?**

2) **தேவன் மனிதனைக்குறித்துச் சொல்வது என்ன?**
3) **இரட்சிப்பின் வழியில் உள்ள உயர்ந்து செல்லும் படிக்கட்டுகள் யாவை?**

4) **உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்ட உணர்வைவிட சந்தோஷமான அனுபவம் ஏதாகிலும் இருக்கமுடியும் என்று கருதுகிறீர்களா?**

5) **ஆன்மீக வாழ்வில் சறுக்கல்களுக்கும் வீழ்ச்சிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

� copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved.